**வில்கமுவ பிரதேச சபை**

**மாத்தளை மாவட்டம்**

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2015 மே 06 ஆந் திகதியும் முன்னைய ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2014 மார்ச் 27 ஆந் திகதியும் கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.

### 1.2 அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.3 ஆம் பந்தியில் தரப்பட்டுள்ள விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து வில்கமுவ பிரதேச சபையின் 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் கணக்கீட்டுக் குறைபாடுகள் கணக்காய்வின் போது அவதானிக்கப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டில் வீடமைப்பு உதவிகளை வழங்குவதன் கீழ் உதவி பெறுபவர் ஒருவருக்கு ரூபா 24,390 தொகை செலுத்தப்பட்டிருக்கும் போது அத்தொகை கடன்கொடுத்தோராகக் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

(ஆ) மீளாய்வாண்டின்போது கிடைத்த ரூபா 8,000 தொகையான பிணைப்பணம் பிணை முதலீட்டுக் கணக்கில் சீராக்கப்படாதிருந்ததுடன் முதலீட்டின் அடிப்படையில் கிடைத்த வட்டி கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே ஆண்டின் போது விடுவிக்கப்பட்ட ரூபா 31,470 தொகையான ஊழியர்

பிணைகளுக்கு உரிய சீராக்கங்கள் செய்து கணக்கு மீதி சரி செய்யப்பட்டிருக்கவில்லை.

(இ) மீளாய்வாண்டின்போது கிடைத்த 02 கணனிகள், ஒரு அச்சிடல் இயந்திரம், 26 பிளாஸ்டிக் கதிரைகள் மற்றும் 20 கூட்ட மண்டப கதிரைகளின் பெறுமதி என்பவற்றுடன் சபைக்குச் சொந்தமாகக் காணப்பட்ட 04 மோட்டார் வாகனங்களின் பெறுமதி என்பன கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஈ) மீளாய்வாண்டில் முத்திரைக் கட்டண வருமானம் ரூபா 40,500 குறைவாகவும் ஊழியர் சம்பள மீளளிப்பு ரூபா 251,939 தொகை அதிகரித்தும் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

(உ) லேடியங்கல பொது நூலகத்தின் பாதுகாப்பு வேலியை நிர்மாணிக்கும் வேலைக்கான நிறுத்தி வைத்தல் பணத்திற்காக ரூபா 30,868 தொகையான நிதி ஏற்பாடு கிடைத்திருந்த போதும் அந்தத் தொகை கடன்பட்டோரின் கீழ் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஊ) மீளாய்வாண்டில் உள்ளூராட்சி மாகாண சபைகள் அமைச்சினால் வழங்கப்பட்ட ரூபா 628,856 தொகையான 568 கல்வனைஸ் குழாய்களின் பெறுமதி கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

### 1.3.2 இணக்கஞ் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்

நிதிக்கூற்றுக்களில் காணப்படுகின்ற ரூபா 78,855,117 தொகையான 13 கணக்கு விடயங்களுக்குரிய மீதிகளை அவற்றுக்குரிய பட்டோலைகளுக்கும் மற்றும் அறிக்கைகளில் காணப்படுகின்ற மீதிகளுடனும் ஒப்பீடு செய்தபோது ரூபா 13,640,469 தொகையான வேறுபாடு அவதானிக்கப்பட்டது.

### 1.3.3 தொங்கல் கணக்கு

முன்னைய ஆண்டின் நிதிக்கூற்றுக்களில் தொங்கல் கணக்கின் கீழ் உள்ளடக்கப்பட்ட ரூபா 657,609 தொகையான செலவு மீதி, தேவையான சீராக்கங்கள் மேற்கொண்டு கணக்குகளைத் தீர்ப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்படாது மீளாய்வாண்டின் போது அப்பெறுமதி நிதிக்கூற்றுக்களில் முன்கொண்டுவரப்பட்டிருந்தது.

**1.3.4 கிடைக்க வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்**

நீண்டகாலமாக நிதிக்கூற்றுக்களில் முன்கொண்டுவரப்படுகின்ற ரூபா 4,455,227 கூட்டுத்தொகையான கிடைக்க வேண்டிய 05 கணக்கு மீதிகளின் பெறுமதி மற்றும் செலுத்த வேண்டிய ரூபா 1,136,595 தொகையான 02 கணக்கு மீதிகளின் பெறுமதி என்பவற்றை தீர்ப்பதற்கு மீளாய்வாண்டின் போதும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை.

**1.3.5 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை**

ரூபா 28,140,129 கூட்டுத்தொகையான 06 கணக்கு விடயங்களுக்குரிய சான்றுகள் சமர்ப்பிக்கப்படாமையால் அக் கொடுக்கல் வாங்கல்களை கணக்காய்வின் போது திருப்திகரமானதாக பரீட்சிக்க முடியாதிருந்தது.

**1.3.6 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களும் இணங்காமை**

கீழே விபரமாகக் காண்பிக்கப்படுகின்ற இணங்காமைச் சந்தர்ப்பங்கள் கணக்காய்வின் போது அவதானிக்கப்படுகின்றன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் |
|---|---|
| (அ) 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச் சட்டத்தின் 12(1)(2) ஆம் பிரிவு | பிரதேச சபையின் நடவடிக்கைகளைச் செய்யும் போது ஆலோசனை வழங்குவதற்காக நிதி மற்றும் கொள்கை தயாரித்தல், வீடமைப்பு, சமூக அபிவிருத்தி கைத்தொழில் மற்றும் சுற்றாடல் போன்ற வசதிகள் தொடர்பாக குழுவொன்று நியமிக்கப்பட வேண்டிய போதிலும் மீளாய்வாண்டின் போது சுற்றாடல் குழு மாத்திரம் நியமிக்கப்பட்டிருந்தது. |

| | | |
|---|---|---|
| (ஆ) | 1988 இன் பிரதேச சபைகள் (நிதி மற்றும் நிர்வாகம்) விதிக் கோவையின் விதி இலக்கம் 217 | சபைக்குக் கையளிக்கப்பட்ட சபையினால் பயன்பாட்டிற்கு எடுக்கப்பட்ட மற்றும் சபையினால் குடியிருப்பிற்கு பயன்படுத்தப்பட சகல காணிகள் மற்றும் கட்டிடங்கள் தொடர்பான விபரங்களை உள்ளடக்கி பீ.எஸ். 46 படிவத்தின் பிரகாரம் பதிவேடொன்று பேணப்பட்டிருக்கவில்லை. |
| (இ) | இலங்கைக் குடியரசின் தாபன விதிக் கோவையின் XXIV ஆம் அத்தியாயத்தின் 4.5 ஆம் பிரிவு | கடன்கொடுப்பனவுகளைச் செலுத்தாதிருந்த 08 ஊழியர்களிடமிருந்து அறவிட வேண்டியிருந்த ரூபா 58,112 தொகையான இடர்கடன் மீதி மற்றும் ரூபா 21,251 தொகையான வாகனக் கடன் மீதி என்பவற்றை அவர்களின் பிணையாளர்களிடமிருந்து அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |

## 2. நிதி மீளாய்வு

---------------------------

### 2.1 நிதி விளைவு

--------------------------------

கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2014 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டின் போது சபையின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 455,125 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 6,313,985 ஆக இருந்தது. முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டின் நிதி விளைவில் ரூபா 5,858,860 வீழ்ச்சியைக் காண்பித்தது.

### 2.2 பகுப்பாய்வு ரீதியான நிதி மீளாய்வுகள்

------------------------------------------------------------------

பிரதேச சபையின் நிதி நிலைமை மற்றும் நிதிச் செயலாற்றல் தொடர்பான முக்கியமான சில தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

(அ) ஆண்டின் செயற்பாட்டு வருமானத்துடன் ஒப்பிடும் போது மிகையை முன்னைய ஆண்டில் காணப்பட்ட நிலையுடன் ஒப்பிடும் போது மிகவும் குறைவான பெறுமதியைக் கொண்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.

(ஆ) ஆண்டின் மொத்த வருமானத்தில் மொத்தச் செலவினம் 98 சதவீதம் ஆக இருந்தமையால் சபையின் வருமானத்துடன் ஒப்பிடும் போது செலவினம் மிகவும் உயர்ந்த மட்டத்தில் காணப்படுகின்றமை அவதானிக்கப்பட்டது.

(இ) மீளாய்வாண்டில் நடைமுறைச் சொத்துக்களின் மீதியை விஞ்சி நடைமுறைப் பொறுப்புக்கள் காணப்பட்டன. அது திரவத் தன்மை தொடர்பில் திருப்பதிகரமான நிலையில் இல்லாதிருந்தமை கணக்காய்வின் கருத்தாகும்.

## 2.3 வருமான நிர்வாகம்

-----------------------------------

### 2.3.1 வருமான சேகரித்தலில் செயலாற்றல்

-----------------------------------------------------------

2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு சபையின் வருமான சேகரித்தலின் நிலை தொடர்பான பொழிப்பாக்கப்பட்ட விபரமொன்று கீழே காண்பிக்கப்படுகின்றது.

| வருமான மூலம் | 2014.01.01 இல் நிலுவை | 2014 ஆம் ஆண்டில் பற்றுச்சீட்டிடல் | கிடைக்க வேண்டிய மொத்தத் தொகை | அரம்ப மீதியில் பெறுவனவு | ஆண்டில் பற்றுச் சீட்டிடல்களின் பெறுவனவு | மொத்தப் பெறுவனவு | 2014.12.31 இல் நிலுவை |
|---|---|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| வீதவரியும் வரியும் | 502,089 | 633,959 | 1,136,048 | 184,369 | 553,106 | 737,475 | 398,573 |
| வாடகை | 900,069 | 1.327,150 | 2,227,219 | - | 1,327,150 | 1,327,150 | 900,069 |
| அனுமதிப்பத்திரக் கட்டணம் | 1,985 | 512,803 | 514,788 | - | 512,803 | 512,803 | 1,985 |
| சேவைகளுக்கான கட்டணம் | 733,323 | 1,475,788 | 2,209,111 | 346,939 | 1,040,816 | 1,387,755 | 821,356 |
| பிடியாணைக் கட்டணமும் தண்டப்பணமும் | 892,382 | 2,274,515 | 3,166,897 | 892,382 | 882,629 | 1,775,011 | 1,391,886 |
| | | | | | | | 3,513,869 |

இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) ஆரம்ப ஆதனவரி மீதியில் ஆண்டின் போது 36 சதவீதமான ஆகக் குறைந்த அளவே அறவிடப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் மேலும் ரூபா 317,720 தொகையான நிலுவை மீதியொன்று காணப்பட்டது.

(ஆ) வாடகை மற்றும் அனுமதிப்பத்திரக் கட்டண நிலுவை மீதிகளில் எந்தத் தொகையும் ஆண்டின் போது அறவிடப்பட்டிருக்கவில்லை.

(இ) மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறு 5 பிரதான வருமானத் தலைப்புக்களின் நிலுவை வருமானங்களின் கூட்டுத்தொகை ரூபா 3,513,869 ஆன உயர் பெறுமதியைக் கொண்டிருந்தது.

**03. செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்**

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றன.

(அ) 2000 இன் 53 ஆம் இலக்க மற்றும் 1988 இன் 56 ஆம் இலக்க அதிகாரச் சட்டங்களிலிருந்து திருத்தப்பட்ட 1980 இன் 47 ஆம் இலக்க தேசிய சுற்றாடல் அதிகாரச்சட்டத்தின் 26 ஆம் பிரிவின் கீழுள்ள நியதிகளின் பிரகாரம் 47 நெல் ஆலைகளிலிருந்தும், அரைக்கும் ஆலைகள் மற்றும் 08 விடுமுறை விடுதிகளிலிருந்தும் அறவிடவேண்டிய ரூபா 385,000 கூட்டுத்தொகையான அனுமதிப்பத்திரக் கட்டணம் அறவிடப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2014 ஆம் அண்டில் சபையினால் சேகரிக்கப்பட்ட ரூபா 45,926 தொகையான முத்திரைக் கட்டணம் உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகத்திற்கு அனுப்பி வைப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) சபைக்குச் சொந்தமான பேரூந்து வண்டி இரண்டு நாட்கள் வாடகைப் பிரயாணத்திற்காக வில்கமுவ பொலிசினால் முறையற்ற வகையில் பெறப்பட்டிருந்ததுடன் அதற்காக அறவிடவேண்டிய ரூபா 14,400 தொகை சபையினால் அறவிடப்பட்டிருக்கவில்லை.

(ஈ) முன்னைய ஆண்டில் கடன்கொடுத்தோரின் கீழ் ஏற்பாடு ஒதுக்கப்படாது முன்னைய ஆண்டிற்காக மீளாய்வாண்டின் போது ரூபா 67,500

கூட்டுத்தொகையான எரிபொருள் படி சபை உறுப்பினர்களுக்குச் செலுத்தப்பட்டிருந்தது.

## 3.2 ஒப்பந்த நிர்வாகம்

---------------------------------

பின்வரும் வேலைகள் தொடர்பாக 2014 நவம்பர் 28 அந் திகதி மேற்கொள்ளப்பட்ட பௌதீக பரிசோதனையின் போது வெளிப்படுத்தப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

(அ) புஸ்ஸெல்லயாய டிரான்ஸ் போமர் அருகிலுள்ள வீதியை அபிவிருத்தி செய்யும் வேலையின் வேலை விடய இலக்கம் 02 இன் கீழ் மேற்கொள்ளப்பட்ட $20.3m^3$ அளவான 1:2:4 கலவையில் கொங்கிரீட் இடுவதற்காக ரூபா 255.550 தொகை செலுத்தப்பட்டிருந்த போதிலும் உரிய நியமமின்றி கொங்கிரீட் இடப்பட்டிருந்தமையால் அந்த கொங்கிரீட் உடைந்து செல்லக்கூடிய நிலையில் காணப்படுகின்றமை அவதானிக்கப்பட்டது.

(ஆ) கும்புக்ஓய சுடலைக் கூட்டத்தை நிர்மாணிக்கும் வேலைக்குரிய மதிப்பீட்டின் 11 மற்றும் 12 ஆம் இலக்க வேலை விடயத்தின் கீழ் பயன்படுத்தப்பட்ட மரப் பலகைகள் மற்றும் அடிப்பலகைகள் (பறாளை மற்றும் யட்டலீ) குறிப்பிட்ட நியமமின்றியும் பலமின்றியும் இருந்ததுடன் அடிப்பலகையில் கணிசமான அளவில் ஓட்டைகள் காணப்பட்டமையும் அவதானிக்கப்பட்டன.

## 3.3 கழிவுப் பொருள் முகாமைத்துவம்

---------------------------------------------------------

சபை அதிகாரப் பிரதேசத்தில் நாளாந்தம் சேகரிக்கப்படுகின்ற கழிவுகள் மீள்சுழற்சி வேலைத்திட்டத்திற்கு பயன்படுத்தப்படாது உழவு இயந்திரத்தின் மூலம் நாள்தோறும் நாமினிஓயா குளத்திற்கு மேற்பகுதியிலுள்ள அரச காணியில் பாதுகாப்பின்றி அகற்றப்பட்டமையால் சுற்றாடலுக்குப் போன்றே பிரதேசத்தில் நடமாடுகின்ற மிருகங்களும் பல்வேறு வகையில் பிரச்சினைகளுக்கு முகங்கொடுக்க வேண்டி ஏற்பட்டமை அவதானிக்கப்பட்டது.

**4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்**

---

**4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு**

---

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டின் போது பாதீட்டின் மூலம் 37 செலவின விடயங்களுக்காக ஒதுக்கப்பட்ட ரூபா 679,000 தொகையான நிதி ஏற்பாடுகளிலிருந்து எவ்வித செலவினமும் செய்யப்படாது ஏனைய செலவின விடயங்களுக்கு மாற்றப்பட்டும் சேமிக்கப்பட்டும் இருந்தன.

(ஆ) மீளாய்வாண்டிற்கான பாதீட்டின் மூலம் 17 வருமானத் தலைப்புக்களின் கிழ் ரூபா 1,691,200 கூட்டுத்தொகையான வருமானத்தை உழைப்பதற்கு இலக்கிடப்பட்டிருந்த போதிலும் எந்த வருமானமும் உழைக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) 17 செலவினத் தலைப்புக்களில் மதிப்பீடு செய்யப்பட்ட செலவின எல்லையை விஞ்சி ரூபா 1,519.345 தொகை செலவிடப்பட்டிருந்தது.

**4.2 தீர்க்கப்படாத மற்றும் பதிலளிக்கப்படாத கணக்காய்வு ஐயவினாக்கள்**

---

2015 மார்ச் 31 ஆந் திகதி வரையில் சபைக்குச் சமர்ப்பிக்கப்பட்ட கணக்காய்வு ஐயவினாக்களில் 05 ஐயவினாக்களுக்கு பதிலளிக்கப்படாதிருந்ததுடன் அந்த ஐயவினாக்களுடன் தொடர்புடைய கொடுக்கல் வாங்கல்களின் கணிப்பீடு செய்யக்கூடிய பெறுமதி ரூபா 3,509,702 ஆகும்.

**5. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்**

---

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் சபையின் விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) கணக்கீடு
(ஆ) வருமான நிர்வாகம்
(இ) சொத்துக்கள் முகாமைத்துவம்
(ஈ) ஒப்பந்த நிருவாகம்